செ.வெ.எண்: 50 நாள்: 17.02.2017

# அரசு மருத்துவமனைகளில் பொதுமக்களுக்கு தரமான சிகிச்சை அளிக்கும் வகையில் அனைத்து மருத்துவ வசதிகளும் சிறப்பாக செய்யப்பட்டுள்ளது - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் பொது சுகாதாரத்துறையின் சார்பில் அனைத்து சுகாதார திட்டங்கள் குறித்த ஆய்வுக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (17-02-2017) நடைபெற்றது.

இந்த அனைத்து சுகாதார திட்டங்கள் குறித்த ஆய்வுக்கூட்டத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் துவக்கி வைத்து பேசியதாவது:

தமிழகஅரசு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறது. இதன்படி நமது மாவட்டத்தில் சுகாதாரத்துறையில் தமிழகஅரசின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் அனைத்து சுகாதாரத்திட்டங்கள் குறித்த ஆய்வுக்கூட்டம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இக்கூட்டத்தில் மாவட்ட நலச்சங்கம், குடும்ப நல அறுவை சிகிச்சை தர நிர்ணயம், தனியார் மருத்துவமனைகள் குடும்பநல அறுவை சிகிச்சை செய்திட அங்கீகாரம் வழங்குதல், அரசு அலுவலர்களுக்கான மருத்துவக்காப்பீட்டுத்திட்டம், டாக்டர்.முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித்திட்டம், நோயாளர் நலச்சங்கம், தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச்சங்கம், இரத்தவங்கி செயல்பாடு, காசநோய் திட்டம், சித்த மருத்துவம், மாவட்ட பார்வை இழப்பு தடுப்புச்சங்கம் உள்ளிட்ட பல்வேறு சுகாதாரத்திட்டங்கள் குறித்து ஆய்வு செய்யப்பட்டது.

இக்கூட்டத்தில் ஆரம்ப சுகாதார நிலையங்களில் கர்ப்பிணி தாய்மார்கள் சிகிச்சை விபரம், குழந்தை பிறப்பு விகிதம், குழந்தைகளுக்கு தடுப்பூசி போடப்பட்ட விபரம், மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்ற நோயாளிகளின் எண்ணிக்கை, அறுவைசிகிச்சை விபரம், மருத்துவமனைகளில் மேற்கொள்ளப்பட்ட அடிப்படை வசதிகள் மற்றும் செலவின விபரம், குடும்ப கட்டுப்பாடு செய்யப்பட்ட எண்ணிக்கை மற்றும் பொதுமக்களிடம் மேற்கொள்ளப்பட்ட விழிப்புணர்வு, மாற்றுத்திறனாளிகள் அடையாள அட்டை வழங்கிய விபரம், காசநோயாளிகளின் எண்ணிக்கை மற்றும் வழங்கப்படும் சிகிச்சைகள், எச்.ஐ.வி-ஆல் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை, தொடர் கூட்டு மருந்து சிகிச்சைகள் மற்றும் நம்பிக்கை மையத்தில் வழங்கப்படும் ஆலோசனைகள், கண் பரிசோதனை முகாம் மற்றும் கண் பரிசோதனை செய்யப்பட்ட நபர்களின் எண்ணிக்கை உள்ளிட்ட பல்வேறு தகவல்கள் கேட்டறிந்து ஆய்வு செய்யப்பட்டது.

இந்த ஆய்வில் கர்ப்பிணி தாய்மார்களின் சிகிச்சை குறித்த விபரங்களை அவரது குடும்பத்தினருக்கு தெரிவித்து நல்ல முறையில் தொடர் சிகிச்சை மேற்கொள்ள ஒத்துழைக்கவும், தகுதியுள்ள நபர்களுக்கு இரத்த வங்கியின் மூலம் இரத்தத்தினை பெற்று செலுத்தவும், குடும்ப கட்டுப்பாட்டின் அவசியம் குறித்து பொதுமக்களிடம் போதிய விழிப்புணர்வு ஏற்படுத்தவும், எச்.ஐ.வி-ஆல் பாதிக்கப்பட்டோருக்கு நம்பிக்கை மையத்தின் மூலம் தொடர் மருத்துவ ஆலோசனைகள் வழங்கவும், போலி மருத்துவர்கள் குறித்த தகவல்களை வழங்கவும், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்தில் ஒவ்வொரு திங்களும் தேசிய மாற்றுத்திறனாளிகள் அடையாள அட்டை வழங்கும் வகையில் மருத்துவர்கள் நேரில் சென்று பரிசோதனை மேற்கொள்ளவும் சம்மந்தப்பட்ட மருத்துவ அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும் அரசு மருத்துவமனைகளில் பொதுமக்களுக்கு தரமான சிகிச்சை அளிக்கும் வகையில் அனைத்து மருத்துவ வசதிகளும் சிறப்பாக செய்யப்பட்டுள்ளது. எனவே அனைத்து பொதுமக்களும் அரசு மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று நோயற்ற வாழ்வு வாழ வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

இக்கூட்டத்தில் இணை இயக்குநர் (பொது சுகாதாரம் மற்றும் ஊரகநலப்பணிகள்) மரு.ஷம்சாத்பேகம், துணை இயக்குநர்கள் மரு.பரணீதரன் (புதுக்கோட்டை), மரு.கலைவாணி (அறந்தாங்கி) மற்றும் மருத்துவ அலுவலர்கள் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**